பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
05 10 2025 SUNDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் வருவாயை அதிகரிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம். அனைத்துப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Simran Sharma வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் வருவாயை அதிகரிப்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

மஹாராஷ்ட்ராவின் Ahilyanagar-ல் விவசாயிகள் பங்கேற்ற பேரணியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டம் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவியதாக அவர் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறைக்கென தனி அமைச்சகத்தை ஏற்படுத்தியவர் பிரதமர் திரு. நரேந்திர மோடி என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம். அனைத்துப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட எல். முருகன் 60 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் சட்டபூர்வமானது என்று தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் இதற்கான பிரிவு இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதன்படி, தேர்தலுக்கு முன்னர் வாக்காளர் பட்டியலை திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பீகார் சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் 22ஆம் தேதிக்குள் நடத்தப்படும் என்றும் திரு. Gyanesh Kumar கூறினார்.

>>>>><<<<<

ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசின் தவறுகளை வெளியிடும் ஊடகங்களை அரசு கேபிள் இணைப்பில் தமிழ் சேனல்கள் வரிசையில் இடம்பெறச் செய்யாமல், பிறமொழிச் சேனலாக பட்டியலிடுவதாக குறை கூறியுள்ளார்.

திமுக அரசுக்கு எதிரான செய்திகள் எதுவும் வரக்கூடாது என்னும் நோக்கில் இதுபோன்ற நடவடிக்கைகளில் திமுக அரசு ஈடுபடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

திமுக அரசின் இந்த நடவடிக்கைக்கு, சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் உரிய பாடம் புகட்டுவார்கள் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

>>>>><<<<<

மத்திய அரசின் சமூக பாதுகாப்பு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு திருவிழா நாடுமுழுவதும் நாளை நடைபெறவுள்ளது.

வருங்கால வைப்புநிதி அமைப்பின் சார்பில் இந்த திருவிழா நடைபெறுவதாக அதன் மண்டல ஆணையாளர் திரு. விஜய் ஆனந்த், எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் விஜய் ஆனந்த் 47 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஈரோடு மாவட்டத்தை ஒட்டிய மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள பாலமலை கோவிலுக்குச் சென்று, வழி தெரியாமல் சிக்கித் தவித்த 33 பேரை வனத்துறையினர் பாதுகாப்பாக மீட்டனர்.

வனப்பகுதியில் ஒரு சில இடங்களில் கிடைத்த செல்ஃபோன் சிக்னலை பயன்படுத்தி, காவல்துறையினரின் உதவி கோரியதை அடுத்து அவர்கள் மீட்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – மூர்த்தி 52 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரை 61 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கன்னியாகுமரி மாவட்டத்தின் முப்பந்தல் பகுதியில் உள்ள காற்றாலை செயல்பாடுகளை மின்துறை முதன்மைச் செயலர் திரு. ராதாகிருஷ்ணன் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

திண்டுக்கல், காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக் கழகம் சார்பில் பிரபல கிரிக்கெட் ஆட்டக்கார் வி.வி.எஸ். லெஷ்மன்-க்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டில் ஏரியில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Simran Sharma வெண்கலப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 200 மீட்டர் ஓட்டப் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 6 தங்கம், 6 வெள்ளி, 7 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா-பாகிஸ்தான் இடையேயான ஆட்டம் தற்போது கொழும்பில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 43 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 191 ரன் எடுத்துள்ளது.

>>>>><<<<<

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Shriyanshi Valishetty பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 15-21, 22-20, 21-7 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Tasnim Mir-ஐ வென்றார்.

>>>>><<<<<

உகாண்டா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rujula Ramu பட்டம் வென்றார்.

>>>>>END<<<<<